ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2020/9 - 2017 මැයි මස 22 වැනි සඳුදා - 2017.05.22
2020/9 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

**வடமத்திய மாகாண மாகாண சபை**

வட மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 154 (ஊ) (4) மற்றும் (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் வட மத்திய மாகாண ஆளுநர் பி. பீ. திசாநாயக்க ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளேன் என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

1. கௌரவ எஸ். எம். பேஷல ஜயரத்ன பண்டார என்பவரை-

2017.05.17 ஆந் திகதி தொடக்கம் வட மத்திய மாகாண முதலமைச்சராக மற்றும் சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராம உட்கட்டமைப்பு வசதிகள், விசேட கருத்திட்டம், சுற்றுலா, கல்வி, தகவல் தொழில்நுட்பம், பொறியியல், நிர்மாண மற்றும் கலாசார அமைச்சராக.

அமைச்சின் செயலாளர் : திருமதி டபிள்யூ. ரி. ஏ. மானெல் - இ. நி. சே. தரம் I
(கடமையாற்றுவதற்கு).

2. கௌரவ எம். ஹேரத் பண்டா என்பவரை-

2017.05.10 ஆந் திகதி தொடக்கம் வட மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலனோம்பல், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள், சுற்றாடல் மற்றும் மாகாண சபை அலுவல்கள் அமைச்சராக.

அமைச்சின் செயலாளர் : திரு. எஸ். எம். எஸ். பந்துலசேன - இ. நி. சே. விஷேட தரம்.

3. கௌரவ சுசில் குணரத்ன என்பவரை-

2017.05.16 ஆந் திகதி தொடக்கம் வட மத்திய மாகாண கூட்டுறவு, வர்த்தகம், உணவு, போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக.

அமைச்சின் செயலாளர் : திரு. ஆர். ஏ. எஸ். ஜயதிலக - இ. நி. சே. விஷேட தரம்.

1A - PG 3532 — 08 (2017/05)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. கௌரவ டபிள்யூ. கே. சரத் இலங்கசிங்ஹ என்பவரை –

2017.05.17 ஆந் திகதி தொடக்கம் வட மத்திய மாகாண காணி, நீர்ப்பாசனம், பெருந்தெருக்கல், வீடமைப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சராக.

அமைச்சின் செயலாளர் : திரு. பி. கே. ஜயலத் – இ. நி. சே. தரம் I.

5. கௌரவ சம்பத் ஸ்ரீ நிலன்த விக்ரமாராச்சி என்பவரை–

2017.05.17 ஆந் திகதி தொடக்கம் வட மத்திய மாகாண விவசாயம், விவசாய உற்பத்தி விற்பனை, கால்நடை உற்பத்தி மற்றும் மிருக வைத்தியம் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சராக.

அமைச்சின் செயலாளர் : திரு. ஈ. எம். எம். ஏக்கநாயக்க – இ. நி. சே. தரம் I
(கடமையாற்றுவதற்கு).

பி. பீ. திசாநாயக,
வட மத்திய மாகாண ஆளுநர்.

வட மத்திய மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2017, மே 18.

6 – 182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.